பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

14 11 2024 7 15

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. பழங்குடியினர் நலனில் மத்திய அரசு கூடுதல் கவனம் செலுத்தி வருவதாக பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.
2. மகளிரின் பங்களிப்பை அனைத்து துறைகளிலும் அதிகரிக்கும் நோக்கில் மத்திய தொழிலக பாதுகாப்புப் படையில் முதலாவது அனைத்து மகளிர் பிரிவு-க்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.
3. இலங்கை நாடாளுமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு சற்று முன் தொடங்கி நடைபெற்று வருகிறது.
4. உலக நீரிழிவு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.
5. தேசிய சீனியர் ஆடவர் ஹாக்கிப் போட்டியில் மணிப்பூர், ஹரியானா, ஒடிஸா உத்திரபிரதேச அணிகள் அரை இறுதிக்கு முன்னேறியுள்ளன.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

பழங்குடியினர் நலனில் மத்திய அரசு கூடுதல் கவனம் செலுத்தி வருவதாக பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

ஜார்க்கண்ட் மாநிலம் **Godda**-வில் தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், காங்கிரஸ் கட்சி இடஒதுக்கீட்டுக்கு எதிராக இருந்து வந்துள்ளது என்று தெரிவித்தார்.

ஷெடியூல்டு வகுப்பினர் மற்றும் பழங்குடியினரின் நலனுக்கான திட்டங்களை பிஜேபி அரசுதான் செயல்படுத்தியுள்ளதாக அவர் கூறினார்.

நாடு விடுதலையடைந்து 70 ஆண்டுகள் வரை ஜார்க்கண்ட் மாநிலத்தின் பல பகுதிகளுக்கு ரயில் போக்குவரத்து இணைப்பு இல்லை என்று கூறிய அவர், தற்போது கோடா உட்பட மாநிலத்தின் பல பகுதிகளுக்கு ரயில் சேவை இயக்கப்படுவதாக தெரிவித்தார்.

பகவான் பிர்சா முண்டா உட்பட ஜார்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த பழங்குடியின தியாகிகளின் புகழை பிஜேபி அரசு நாடு முழுவதும் கொண்டு சேர்த்துள்ளதாக திரு நரேந்திரமோடி கூறினார்.

**[]<<<>>>[]**

மகாராஷ்டிரா மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

தர்பாணியில் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய பிஜேபி மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு அமித்ஷா, மகாராஷ்டிரா மாநிலத்தை முன்னேற்றப் பாதையில் தொடர்ந்து கொண்டு செல்ல தற்போதைய அரசு நீடிக்க வேண்டுமென்று கூறினார்.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று நடைபெற்ற பிரச்சாரக் கூட்டங்களில் மத்திய அமைச்சர்கள் திரு ஜெ பி நட்டா, திரு நிதின் கட்கரி, திரு சிவராஜ்சிங் சௌஹான், திரு பியூஷ் கோயல், திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா, உத்திரபிரதேச முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் உள்ளிட்டோர் பிஜேபி வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரச்சாரம் மேற்கொண்டனர்.

லத்தூரில் நடைபெற்ற பிரச்சார பொதுக்கூட்டத்தில் பேசிய காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, மகாராஷ்டிராவில் திரு ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான அரசு விவசாயிகள் நலனில் அக்கறை செலுத்தவில்லை என்று குற்றம்சாட்டினார்.

திரு சரத்பவார், திரு உத்தவ் தாக்ரே, உள்ளிட்ட தலைவர்களும் காங்கிரஸ் மற்றும் கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர்களை ஆதரித்து பிரச்சாரம் மேற்கொண்டனர்.

**[]<<<>>>[]**

கேரள மாநிலம் வயநாடு மக்களவைத் தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் 65 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

அஸ்ஸாம் மாநிலத்தில் ஐந்து சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத் தேர்தலில் 73 சதவீத வாக்குகளும், கர்நாடகாவில் மூன்று சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் 80 சதவீத வாக்குகளும் பதிவாகியுள்ளன.

மேற்கு வங்கத்தில் ஆறு சட்டப்பேரவை தொகுதிக்கான இடைத்தேர்தலில் 69 சதவீத வாக்குகளும் பதிவாகி உள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

**[]<<<>>>[]**

மகளிரின் பங்களிப்பை அனைத்து துறைகளிலும் அதிகரிக்கும் நோக்கில் மத்திய தொழிலக பாதுகாப்புப் படையில் முதலாவது அனைத்து மகளிர் பிரிவு-க்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், மத்திய அரசின் இந்த நடவடிக்கையின் மூலம் விமான நிலையங்கள் உள்ளிட்ட முக்கிய கட்டமைப்புகளை பாதுகாக்கும் பொறுப்பு மகளிருக்கும் வழங்கப்படும் என்று கூறியுள்ளார்.

தேசத்தை பாதுகாக்கும் முக்கிய பணியில் மகளிர் அதிக அளவில் பங்கேற்க வேண்டும் என்ற விருப்பத்தை இது பூர்த்தி செய்யும் என்று திரு அமித்ஷா தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

இந்தியாவும் - ஜெர்மனியும் நீண்டகால நல்லுறவை கொண்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

ஜெர்மனி ஒருங்கிணைப்பு தினத்தையொட்டி புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், இரு நாடுகளும் பொருளாதாரம், தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்புடன் செயல்பட்டு வருவதாகவும், இது மேலும் வலுப்படுத்தப்படும் என்று கூறினார்.

முன்னதாக இந்தியா –பிலிப்பைன்ஸ் இடையே தூதரக நல்லுறவு ஏற்பட்டு 75 ஆண்டுகள் நிறைவடைவதை குறிக்கும் வகையில் புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், கடந்த சில ஆண்டுகளில் இரு நாடுகளுக்கும் இடையேயான நல்லுறவு மேம்பட்டுள்ளது என்றார்.

பாதுகாப்புத் துறையில் மேலும் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் திரு ஜெய்சங்கர் தெரிவீத்தார்.

**[]<<<>>>[]**

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியை அதிகரிப்பது தொடர்பான இரண்டு நாள் கருத்தரங்கம் ஒடிஸா மாநிலம் புவனேஸ்வரில் இன்று தொடங்குகிறது.

மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி இந்த மாநாட்டை தொடங்கி வைக்கிறார்.

இதில் மத்திய இணை அமைச்சர் ஸ்ரீபத்நாயக், ஒடிஸா முதலமைச்சர் திரு மோகன் சரண் மஜி உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

பிரதமரின் மேற்கூரை சூரியசக்தி திட்டம் தொடர்பாகவும், 2030-ஆம் ஆண்டுக்குள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திறனை 500 ஜிகாவாட் அளவுக்கு எட்டுவது குறித்தும் இந்த மாநாட்டில் விவாதிக்கப்படுகிறது.

[]<<<>>>[]

மை-பாரத் இணைய தளத்தில் ஒன்றரை கோடி இளைஞர்கள் தன்னார்வலர்களாக பதிவு செய்துள்ளதாக மத்திய இளைஞர் நலத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

சத்திஷ்கர் மாநிலத்தின் ஜஸ்பூரில் பழங்குடியினர் தின கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், தேச கட்டமைப்பில் இளைஞர்கள் முக்கிய பங்காற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

விளையாட்டு, கலை, கலாச்சாரம் என அனைத்து துறைகளிலும் இளைஞர்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யும் வகையில் மத்திய அரசு செயல்பட்டு வருவதாக திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

[]<<<>>>[]

71-வது அகில இந்திய கூட்டுறவு வார விழா இன்று தொடங்குகிறது. நாடு முழுவதும் வரும் 20-ம் தேதி வரை இந்த விழா கொண்டாடப்படவுள்ளது.

கூட்டுறவு இயக்கத்தின் கொள்கைகள், நோக்கங்கள், திட்டங்கள் மற்றும் அதன் பலன்கள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், 1953-ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் அகில இந்திய கூட்டுறவு வார விழா கொண்டாடப்பட்டு வருகிறது.

வளர்ச்சி அடைந்த பாரதத்தைக் கட்டமைப்பதில் கூட்டுறவு நிறுவனங்களின் பங்கு என்ற கருப்பொருளில் இந்த ஆண்டு இந்த விழா நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது.

இதனிடையே கூட்டுறவு அமைப்புகளை நவீனப் படுத்தும் பணிகள் விரைந்து மேற்கொள்ளப்படுவதாக மத்திய கூட்டுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஊரக வங்கிகளை வலுப்படுத்தவும், வெளிப்படைத் தன்மையை அதிகரிக்கும் நோக்கிலும் நாடு முழுவதும் 68 ஆயிரம் தொடக்க வேளாண்மைக் கடன் சங்கங்கள் நவீனப்படுத்தப்பட்டு வருவதாக அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

[]<<<>>>[]

இலங்கை நாடாளுமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு சற்று முன் தொடங்கி நடைபெற்று வருகிறது.
வாக்குப்பதிவு மாலை நான்கு மணி வரை நடைபெறுகிறது.
255 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த தேர்தலின் மூலம் தேர்வு செய்யப்படவுள்ளனர்.
தேர்தலுக்காக அந்நாட்டில் 22 மாவட்டங்களில் 11 ஆயிரத்து 314 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.
90 ஆயிரத்திற்கும் கூடுதலான ராணுவத்தினர் மற்றும் காவல்துறையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

[]<<<>>>[]

உலக நீரிழிவு நோய் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

நீரிழிவு நோய் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்கும் நோக்கில் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 14-ம் தேதி இந்த தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

நீரிழிவு தடுப்பு, தொடக்கத்திலேயே நோய் கண்டறிதல், தேவையான சிகிச்சை மற்றும் பராமரிப்பு போன்றவை குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த இந்த தினம் கடைப்பிக்கப்படுகிறது.

நீரிழிவு சிகிச்சை தொடர்பான தடைகளை அகற்றி, இடைவெளிகளை நிரப்புதல் என்ற கருப்பொருளில் இந்த ஆண்டு இந்த தினம் கடைப்படிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் வெளியிட்ட ஆய்வறிக்கையில், இந்தியாவில் 10 கோடியே 10 லட்சம் பேருக்கு நீரிழிவு நோயின் தாக்கம் இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தினத்தையொட்டி நாடு முழுவதும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

[]<<<>>>[]

தில்லியின் காற்றின் தரம் மேலும் மோசமடைந்ததாக மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

காற்றின் தரக்குறியீடு 439 என்ற அளவில் இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே நகரின் பல இடங்களில் அடுத்த சில நாட்களுக்கு இரவு மற்றும் அதிகாலை நேரங்களில் பனிமூட்டம் காணப்படும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது,

[]<<<>>>[]

தேசிய சீனியர் ஆடவர் ஹாக்கிப் போட்டியில் மணிப்பூர், ஹரியானா, ஒடிஸா உத்திரபிரதேச அணிகள் அரை இறுதிக்கு முன்னேறியுள்ளன.

சென்னையில் நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டங்களில் மணிப்பூர் - பஞ்சாபையும், ஹரியானா, மகாராஷ்டிராவையும், உத்திரபிரதேசம் - தமிழ்நாட்டையும், ஒடிஸா – கர்நாடகா அணியையும் வென்றன.

[]<<<>>>[]

மொனோக்கோவில் நடைபெற்று வரும் மான்டிகார்லோ ஸ்குவாஷ் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் ஜோஷ்னா சின்னப்பா அரை இறுதிக்கு முன்னேறியுள்ளார்.

நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் அவர் இங்கிலாந்தின் அலீஷியாவை வென்றார்.

[]<<<>>>[]

தில்லியில் நடைபெற்ற பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான உலக துப்பாக்கி சுடும் போட்டியில் இந்தியா, 9 தங்கம், 9 வெள்ளி, 6 வெண்கலம் என மொத்தம் 24 பதக்கங்களை வென்றுள்ளது.

***End of News***